6th March 1964]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No, Sir.

(b) Does not arise.

MR. SPEAKER: Questions are over.

**[Note—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]**

## II—EXPUNCTION OF OBJECTIONABLE MATTER

MR. SPEAKER: I would like to bring to the notice of the hon. Members that under Rule 67 (iv) of the Madras Assembly Rules, a member, while speaking, must not reflect upon the conduct of the President or Governor or any Court of Justice. It has been brought to my notice that the hon. Member Sri C. G. Viswanathan, while speaking in the Assembly on 5th March 1964 during the general discussion on the budget when the Deputy Speaker was presiding, made certain remarks reflecting on the conduct of a Court of Justice. As the remarks might be construed as contempt of Court, under Rule 285 of the Assembly Rules I have ordered the expunction of those remarks from, and the making of consequential alterations in, the official report of the proceedings.

## III—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964-65—*cont.*

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** கனம் தலைவர் அவர்களே, 1964-65-ம் வருஷ நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு ஏற்பட்ட சங்கடங்களால் அங்கிருந்து வருகின்ற அகதிகளைப் பராமரிப்பதற்காகக் கோடானு கோடி ரூபாயைச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் அந்த நிலை தீர்ந்த பாடாக இல்லை. இப்போது நமது மாகாணத்திலிருந்து அயல் நாடுகளுக்குச் சென்று பிழைத்துக் கொண்டிருந்தவர்கள் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மலேயா, பர்மா, சிலோன் போன்ற இடங்களில் இருந்து ஏராளமானவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு பத்திரிகையில்கூடப் பார்த்தேன். ஒரு லட்சம் பேர் சிலோனில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது பெருங்கவலைக்கிடமான விஷயமாக இருக்கிறது. குறிப்பாக கிழக்கு இராமநாதபுரத்திலிருந்தும், திருநெல்வேலியிலிருந்தும் சென்றவர்கள்தான் இன்று வெளியேறி வருபவர்களில் பெரும் பகுதியினர். அவ்வாறு வெளி நாடுகளுக்குச் சென்று குடியேறியவர்கள் எல்லாம் தொழில் செய்து கொண்டிருந்தவர்கள். அவர்கள் இந்த நிலைமையிலே வெளியேற்றப்படும்போது என்ன நிலைமையிலே அவர்கள் ஆதரிக்கப்படப் போகிறார்கள் என்பதைப் பற்றி இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனது பகுதியைப் பொறுத்த மட்டில் கிழக்குக் கடற்கரையோரத்திலுள்ள முஸ்லீம்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் பிற்பட்ட வகுப்பினர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காக என்று